முருகப்பெருமான் துணை

**மகான் கூர்மானந்தர் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

29.10.2022, சனிக்கிழமை

1. யோகராசனே அரங்கா போற்றி
உயர்வான தரும வழிகாட்டும்
யோகசித்தே தேசிகா வாழ்க
உன்பெருமைகூறி அனுகூல ஆசி
2. ஆசிதனை சுபகிருது துலை திங்கள்
அறிவிப்பேன் வியதிகதி காரிவாரம்
(சுபகிருது வருடம் ஐப்பசி மாதம் 12 ம் நாள் 29.10.2022, சனிக்கிழமை)
ஆசிதனை கூர்மானந்தர் யானும்
அரங்கன் கேட்க உரைப்பேன்
3. உரைப்பேன் உலகோர் உயர்வுபெற
உண்மை வழிதனில் வந்துமே
கரைபடா வண்ணம் சேவை ஆற்றி
கடைத்தேற மக்களுக்கு அருளுவேன்
4. அருளாக அறமாக ஆற்றல்பட
அகிலத்தில் அருளுகின்ற ஞானி
அருள்மிக்க சன்மார்க்க வழிதனை
அகிலத்தார் ஏற்று வருக
5. வருகவே உலகினை வாட்டும்
வறுமை பேரிடர்களெல்லாம்
தருமத்தால் தருமராஜன் தயவால்
தானாக விலகி மாற்றம் காண்கும்
6. காண்கவே தொடர் தருமம்தனை
கட்டாய சேவையாக மக்கள்
சண்முகனார் வழிபாட்டுடன் செய்து
சமத்துவ சகோதரத்துவம்பட நடக்க
7. நடக்கவே நாடெங்கிலும் அமைதி
நல்கியே ஞான பலமிக்க
இடர்வெல்லும் தலைமைகளாக
இவ்வுலகில் அனைத்து தேசங்களும்
8. தேசங்களும் ஞான பூமியாக
தெரிவிப்பேன் ஞான ஆட்சிதனை
தேசிகனார் வழிகாட்டலில் பெறும்
தேற்றமும் நல்ல மாற்றமும் தரும்
9. தருகின்ற மாதவசி அரங்கன்
தவசிகளெல்லாம் இணைந்த
தரும ஞான தயவு சக்திகூடிய
தனித்துவமிக்க ஞானி ஆகும்

10. ஆகவே அரங்கன் வாழ் குடில்
ஆறுமுகனார் ஏழாம் படைவீடான
செகம் காக்கும் ஓங்காரகுடிலை
செப்பிடுவேன் உலகோர் வணங்கி வர

11. வருகவே உலகினில் மாற்றம்
வந்தடையும் ஞான ஆட்சியாக
தருமம் வளர்ந்து தலைமை சிறப்புற
தவசி வழிகாட்டுபவரால் நடக்கும்
அனுகூல ஆசி முற்றே

—சுபம்—